Registered as a News Paper in Ceylon

P. M. G. No. H. A. 59/300 of 1953.

# இந்து சாதனம்

விரோதி ஞு (1889) ஆவணி 28உ ஆரம்பமானது

வெள்ளி தோறும் வெளி வருவது

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசு தென்றலும் வீங்கிள வேனிலும், மூசுவண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே.

தனிப்பிரதி: சதம் 10.

[புத் - கூகூ] யாழ்ப்பாணம்:- ஜயவருடம் மாசி மீ கஉ வ வெள்ளிக்கிழமை (25 FEB. 1955) [இல-சஎ]

## தமிழ் மொழிக்கு மற்றொரு தனிச்சிறப்பு

தமிழ் மொழிக்கு இனிமை, இளமை, இலக்கிய இலக்கண வளம் என்பனவாய பல தனிச் சிறப்புக்களை அறிஞர் எடுத்துக் காட்டுவர்.

இவற்றுடன் மற்றொரு சிறப்பை எடுத்துக் காட்டுகின்றார் வண கலாநிதி தனிநாயகம் அவர்கள் கோலாலம்பூரில் அவர் 'பேசும் போது''

தமிழ் இலக்கியத்தை வளம்பெறச் செய்வதற்கு முகமதியரும், வைணவரும், சைவரும், சமணரும், பௌத்தரும், கிறித்தவரும் உழைத்திருக்கிறார்கள் தமிழ் இலக்கியங்களில் பல்வேறு சமய இலக்கியங்கள் இருப்பது போல வேறு எந்த மொழியிலும் இல்லை கிறித்தவ, முகம்மதிய இலக்கியங்கள் சமஸ்கிருதத்தில் இல்லை.

ஐரோப்பிய நாடுகளுக்குப் பொதுவாயிருந்த இலத்தின் மொழியில் புத்த சமண இலக்கியங்கள் இல்லை எல்லா இலக்கியங்களையும் எல்லாச் சமயங்களையும் வெளிப்படுத்திய ஒரே மொழி என்ற தனிச் சிறப்பு தமிழுக்கே உண்டு'', என்று கூறினர்.

ஆசிரியத் தலையங்கம்

## கட்டுப்பாட்டுக்கு அடங்காத கட்சிகள்

### ஒழுங்கீனமாக நடப்பதுதானா புரட்சி இயக்கத்தின் பொழிப்பு?

ஆந்திர நாட்டில் அண்மையில் நடந்த பொதுத் தேர்தல் நிகழ்ச்சிகளின் பின் வாக்காளர்கள் வீடு திரும்பியபோது அரசாங்கக் கட்டுப்பாடுகளை மீறி ஒழுக்குமுறைகளை ஒதுக்கி விட்டு காட்டினின்றும் பாய்ந்து வெளியேறிய குரங்கினம்போலக் குழப்பஞ் செய்தார்கள் என்று இந்தியச் செய்திகள் கூறின. இவற்றில் இருந்து பெறப்படுவது யாது?

புகைவண்டி ஓட்டத்துக்கு அரசாங்கம் விதித்திருக்கும் ஒழுங்குகள் விதிகள் பிரமாணங்கள் ஒரு கட்சிக்குப் பாதகமாய் இன்னொரு கட்சிக்குப் சாதகமாய் வகுக்கப்பட்டனவல்ல வென்றும் அவையெல்லாம் பொதுசனத்தின் பொது நன்மைக்காகவுள்ளனவென்றும் யாவருமறிவர். அவ்வாறிருந்தும் ஆயிரக்கணக்கான பொதுவுடமைக் கட்சி ஆதரவாளர்கள் புகைவண்டியில் பயணச் சீட்டுப் பெறாது உட்புகுந்து பயணச் சீட்டுடன் செல்லும் பிரயாணிகளுக்குத் தாங்கொணா வசதியீனங்களை விளைவித்து புகைவண்டிப் பகுதி விதிகளுக்கு மாறான வகையில் விரும்பிய இடங்களிலே வண்டியை பலவந்தமாக நிறுத்திப் பெருங் குழப்பஞ் செய்தார்கள் என்றால் பொதுவுடமைக் கட்சியினர் தேச பரிபாலனஞ் செய்யும் பொறுப்பை ஏற்றால் எவ்வாறு நடந்துகொள்வார்கள் எனச் சொல்லவும் வேண்டுமா?

### வேலையில்லா நிலைமை நீங்க வழி

விவசாயம் இயந்திர நுட்பம் ஆகியவற்றில் தேர்ச்சிய விவசாயம் இயந்திர நுட்பம் ஆகியவற்றில் தேர்ச்சியடைந்தோர் ஆயிரம் பேருக்கு இந்த வருடம் தங்கனிக்காவில இடம்கிடைக்குமாம். எல்லாம் நன்கு நடைபெற்றால் இத் தொகை கூடிக்கொண்டு போகும்.

### இன்றும் அன்னியர் ஆட்சியில் உள்ளது திருக்கோணமலை!

புத்த விசாரணைச்சபை அங்கத்தவராகச் சென்ற ஸ்ரீ எல். எச். மேத்தானந்த திருக்கோணமலையிற் பேசும்போது திருகோணமலை அன்னியராட்சியில் இன்னமும் இருப்பது கண்டு வருந்துகிறேன். அன்னியரின் அதிகார வெள்ளத்தின் கழுத்தளவில் அமிழ்ந்து வெளியேற இயலாது திகைக்கின்றனர் எங்கள் தலைவர்கள் என்று கூறினர்.

### கோவா - இலங்கை வர்த்தகம்

கோவாவுடன் வைத்திருக்கும் வர்த்தகத் தொடர்புகளை நீக்குமாறு இலங்கை பாக்கிஸ்தான் அரசாங்கங்களை இந்திய அரசாங்கம் கேட்டிருப்பதாகக் கூறப்படுகின்றது. கோவா விடுதலை இயக்கத்தின் சார்பாக இக்கேள்வி எழுந்திருக்கின்றதெனக் கருதப்படுகின்றது.

## தமிழ் இலக்கிய உலகில் இமயம் போன்ற அறிஞர்

[மகாமகோபாத்தியாய கலாநிதி சாமிநாதஐயர் அவர்கள் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு அவ் விழாச் செயற் குழுவினர் திருவாளர்கள்: வ. சோ தியாகராசன், கி. வா. சகந்நாதன் அவர்கள் வெளியிட்ட கட்டுரையின் சுருக்கம்.]

இந்த நூற்றாண்டில் தமிழ் இலக்கிய உலகில் இரண்டு பெரிய மலைகளைப் போன்ற பெரியவர்கள் தமிழ்மொழிக்குப் புதிய ஒளியைக் கொடுத்தார்கள். ஒருவர் ஸ்ரீ சுப்பிரமணிய பாரதியார். மற்றொருவர் ஸ்ரீ மகாமகோபாத்தியாய கலாநிதி உ. வே. சாமிநாதையரவர்கள். கவிஞர் பாரதியார் தம்முடைய புதிய கவிகளால் தமிழ்த்தாய்க்குப் புதிய அணிகளைப் பூட்டினர். ஐயரவர்களோ, பல காலமாக மங்கி மறைந்து கிடந்த பழைய அணிகளை மீட்டும் எடுத்துக் கொணர்ந்து துலக்கி மெருகூட்டிப் பூட்டி அழகு பார்த்தார்கள். அவர்கள் 1855 ஆம் ஆண்டு மாசி மாதம் 19 - ஆம் தேதி தோன்றினார்கள். அவர்கள் தோன்றிய காலத்தில் இருந்த தமிழின் நிலைக்கும் அவர்கள் மறைந்த காலத்தில் (சித்திரை, 1942) தமிழ் உயர்ந்து நின்ற நிலைக்கும் எவ்வளவோ வேற்றுமை உண்டு. அவர்கள் 1887ம் ஆண்டில் சீவகசிந்தாமணியை அச்சிட்டு வெளியிட்டார்கள். அது முதல் இறுதிக்காலம் வரையில் தமிழ்த் தாயின் அணிகளை ஒவ்வொன்றாகப் புதுக்கும் அற்புதமான தொண்டில் தம் காலம் முழுவதையும் அவர்கள் செலவிட்டார்கள்.

அவர்கள் தோன்றிய காலத்தில் பெரும் புலவர்களும் சங்கநூல்கள் என்று பெயரளவிலே தெரிந்து கொண்டிருந்தார்களே ஒழிய அவை இன்னவை என்பது அவர்களுக்குத் தெரியாது. கோவலன் கதை என்ற ஒரு நாடோடிக் கதையையும் அதில் வரும் கண்ணகியையும் மாதவியையும் அறிவார்களேயன்றிச் சிலப்பதிகாரத்தையும் அதில் உள்ள பாத்திரங்களையும் அறியமாட்டார்கள். அகநானூறு, புறநானூறு என்ற இரண்டுக்கும் உள்ள வேறுபாடு இன்னதென்று தெரியாது. மணிமேகலை எந்தச் சமயத்தைப்பற்றிய நூல் என்பதும் தெரியாது.

இன்று பள்ளிக்கூடத்திற் பயிலும் மூன்றும் வகுப்பு மாணவனுக்குப் பாரியைப்பற்றிய வரலாறு தெரியும். சேரன் செங்குட்டுவனுடைய வெற்றியைப்பற்றி மேல் வகுப்பு மாணாக்கர்கள் படிக்கிறார்கள். பள்ளிக்கூடங்களிலும் கல்லூரிகளிலும் புறநானூறு, குறுந்தொகை, பத்துப்பாட்டு முதலிய சங்க நூல்களிலுள்ள பகுதிகளை பாடமாக வாசிக்கிறார்கள் பிள்ளைகள்.

பல ஆண்டுகளுக்கு முன் திராவிட மொழிகளின் அமை

(தொடர்ச்சி 5-ம் பக்கம்)

### மகாமகோபாத்தியாயர் சாமிநாத ஐயர் நூற்றாண்டு விழா

மகா மகோபாத்தியாயர் கலாநிதி உ. வே. சாமிநாத ஐயர் அவர்களின் நூற்றாண்டு நிறைவுவிழா சென்னையில் 18-2-55-ல் ஆரம்பமாயது. சென்னை முதல் அமைச்சர் ஸ்ரீ காமராஜ் நாடார் ஐயர் அவர்கள் தமிழ் மொழிக்குச் செய்த அருஞ் சேவைகளை எடுத்துக் காட்டிப் பல புகழ் மாலைகளைச் சூட்டினர்.

யாழ்ப்பாணத்தில்

யாழ்ப்பாணம் கலாநிலையத்தார் ஆதரவில் கௌரவ ஸ்ரீ சு. நடேசன் அவர்கள் தலைமையில் மேற்படி விழா நடைபெற்றது. தலைவர் அவர்களும் பேராசிரியர் கலாநிதி க. கணபதிப் பிள்ளை அவர்களும் ஐயர் அவர்களைப் பலவாறு பாராட்டிப் பேசினர்.

## அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் கலாநிதி உ. வே. சாமிநாதையர் நூற்றாண்டு விழா

அண்ணாமலைநகர் பிப்- 21

கலாநிதி உ. வே. சாமிநாதையர் அவர்களின் நூற்றாண்டு விழா அண்ணாமலைப் பல்கலைக்கழகத் தமிழ் மன்றத்தின் ஆதரவில் இன்று மாலை 4 மணிக்கு மிகச் சிறப்பாக நடைபெற்றது. இவ்விழாவுக்கு மன்றத் துணைத்தலைவர் வித்துவான் திரு. மு. அருணாசலம்பிள்ளை அவர்கள் தலைமை வகித்தார். வித்துவான் திரு ச. தண்டபாணி தேசிகர், திரு. அ. இராமசாமிப்பிள்ளை எம்.ஏ.; திரு இராசகோபால் ஆசிரியர் ஐயரவர்களின் தமிழ்த் தொண்டுகளையும், ஊரூராகத் திரிந்து ஏடுகளைத் தேடி எடுத்து அவற்றைப் புத்தக ருபமாகப் பதிப்பித்த வரலாறுகளையும் மிகச் சிறப்பாக எடுத்துரைத்தனர். இரவு 7-30 மணி பளவில் செயலாளர் திரு. சி. சோ. சோமசுந்தரத்தின் நன்றியுரையுடன் கூட்டம் முடிவுற்றது. பேராசிரியர்களும், ஆசிரியர்களும் மாணாக்கர்களும் குழுமியிருந்த காட்சி கண்கொள்ளாத் தன்மையதாகும். இருக்க இடமின்றி வெளியேசின்றகேட்டோரும் பலராவர். ஐயரவர்கள் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் முதல் தமிழ்ப் பேராசிரியர் என்பது இங்கு குறிப்பிடத் தக்கதாகும்.

திருச்சிற்றம்பலம்
வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல்லாம் அரனாமமே
சூழ்க வையகமுந் துயர் தீர்கவே.
திருச்சிற்றம்பலம்


# இந்துசாதனம்

யாழ். ஜய ஸ்ரீ மாசி மீ
கந உ வெள்ளிக்கிழமை


## கேட்டும் கேளாத ........

பொன்னைய கிளை வு வெளியீட்டு நூல் அரங்கேற்ற விழாவில் திரு. க. நவரத்தினம் அவர்களுக்குப் பொன்னாடை போர்த்தியபொழுது நல்ல நடையில் மெல்லியற் சுவை ததும்பச் செந்தமிழிற் சொற்பெருக்காற்றிய வணக்க. சுவாமி கலாநிதி தனிநாயகம் அவர்கள் இலங்கையில் அரச கரும வகையில் அறிக்கைகள் விளம்பரங்கள் முதலியன தமிழாக்கஞ் செய்யப்பெறு திருக்கின்றனவென்று உள்ளம் உடைந்து உரைத்தார்கள். அந்த அரங்கேற்ற நிகழ்ச்சிக்குத் தலைமை தாங்கியவர் செந்தமிழ்த் தீம்பாலமுதச் செம்மை அறிந்த ஒரு அமைச்சர். தமிழ் மொழிக்கு உரிய அரச வரிசை அளிக்கப்படவில்லை என்ற கூற்றுக்களை திரு. நடேசன் அவர்கள் மட்டுமன்று ஏனைய அமைச்சர்களும் நன்கு அறிவர். ஆனல் செவிப்புலன் சென்ற உணர்ச்சியை அறிந்தும் அறியாதார் போன்று இவர்கள் இருக்கின்றார்களா என மக்கள் நினைக்கின்றார்கள். அவைத் தலைமை வகித்த அமைச்சரும் அமைதியாய் அமர்ந்திருந்தாரேயன்றி வணக்க சுவாமி தனிநாயகம் அவர்களுக்கும் தமிழகத்தாருக்கும் ஆறுதல்கூறினரில்லை.

சென்னையிற் சென்ற வாரம் நடைபெற்ற கூட்டம் ஒன்றிற் சொற்பொழிந்த அந்நாட்டதிபதி திரு ஸ்ரீபிரகாசா அவர்கள் இவ்வுலகில் இயங்கும் மொழிகள் எல்லாவற்றிலும் பழைமை வாய்ந்தது தமிழ் என்று வரலாற்றுண்மையை எடுத்துக்காட்டினர். அவ்வாறு பேசியவரின் தாய்மொழி தமிழ் அல்ல என்பதை உள்ளத்தில் வைத்து இலங்கையிலே தமிழ்மொழிக்கு அரசாங்க அலுவலாளர்களால் இயற்றப்படும் அவமானத்தை இனிமேலாவது அரசியல் வாதிகள் ஆராய்வார்களா?

பேராதனையிலே பயிரின இயல் விளக்கப் பெருந் தோட்ட நிலையத்தில் உள்ள மரங்களுக்கு அவற்றின் பெயர் எம மொழியில் எழுதப்பட்டிருந்தாலும் விபரீதத்தை

# வாழ்க்கை வானில்

— வளர்மதி

### மதுவாற் கட்சியிற் பிளவா?

ஐக்கிய தேசியக் கட்சிப் பாராளுமன்ற அங்கத்தவர்களுட் சிலர் மதுவொழிப்பு சூதுவிலக்கல் முதலியனவற்றை ஆதரிக்கவில்லையாம். திரு. சேனநாயகவின் இந்த நன்முயற்சிக்கு மாறாகக் கட்சிப் பலம் தேடுகிறார்களாம். அடுத்த பாராளுமன்றத்தில் மதுக்கட்சியும் அதற்கு எதிர்ப்புக் கட்சியும் என்ற வகையில் இரண்டேயிரண்டு கட்கட்சிகள் இருக்கக்கூடிய வகையிலே தேர்தலில் மக்கள் வாக்களித்தாற்றான் மதுவொழிப்புக்கு பொது ஆதரவு எவ்வளவு இருக்கிறதென்றறியமுடியும்.

### உயர் நீதிமன்ற உத்தியோக மர்மம்

திரு. செ. நாகலிங்கமவர்களின் இன்றைய நிலைமை என்ன? உயர்நீதிமன்ற நீதிபதிப் பதவியிலிருந்து விலகினமை ஏற்றுக்கொள்ளப்பட்டதா நிராகரிக்கப்பட்டதா சமரச ஒழுங்குகள் செய்கை முறையில் நடைபெறுவதற்கு இடமுண்டா? யார் இந்த நிலைமைக்கு உத்தரவாதிகள்?

### புதைப்பது எங்கே?

அணுக்குண்டுகளை நிலத்தை வெட்டிப் புதைத்தல் வேண்டுமென்று திரு. ச.

விளைவிக்கமாட்டாது. ஆனல் இப்பயிரின இயலைப்பற்றி ஆராய ஆங்கேகுவோரின் தாய்மொழியில் அப்பெயர்கள் பொறிக்கப்படாதிருத்தல் அன்னாருக்கு எத்துணை அவமானத்தை அளிப்பது என்பதை அரசியல் வாதிகள் அறியவில்லையா? குறிப்பறியாது கிற்பான் நன்மரம் ஒப்பான் என்பது முதுமொழி. தொல்பொருள் ஆராய்ச்சிக்குப் பல்வேறுவகையில ஊக்கம் ஊட்டும் அரசவை பழம்பெரும் புகழ் வாய்ந்த தமிழ் மொழியின் நிழல் கூட இல்லாதொழிவதற்கு முயற்சி செய்கின்றதென்றல்லவா நாம் ஊகித்தல் வேண்டும்? பழமையாய் என்றும் இளமையாய் இயங்கும் அழுதனைய அழகிய தமிழ் மொழி இயங்காதொழிய, தோல் இருக்கச் சுளை சூள்ந்து அகழ்ந்தவாறு அரசியல் அலுவலாளர்கள் எடுத்திருக்கும் இச் சூழ்ச்சிகளைத் தமிழ் பேசும் அமைச்சர்கள் அறியாதிருக்கின்றார்களா என்று நாம் கேட்கின்றோம்! அன்னார் என்ன சமாதானம் கூறப்போகின்றார்கள் என்று எதிர்பார்க்கின்றோம் .... .... .... ....!

இராசகோபாலாச்சாரியார் அவர்கள் வேண்டிநிற்கின்றார். இவற்றை எங்கே புதைப்பது? இவற்றின் உபயோகத்தைச் சோதிக்கும் வகையில் பசுபிக்கு மா சமுத்திரத்தி லுள்ள மனித சஞ்சாரமற்ற சிலசிறுதீவுகளில் நடந்த வெடிவைபவத்தினுற் பல்லாயிரம் காதவழிக்கப்பா லுள்ளவர்கள் பாதிக்கப்பட்டார்கள் என்றால் இந்த இயமாயுதத்தை எங்கேதான் புதைப்பது? உருசியாவும் அமெரிக்காவும் இந்தக் குண்டுகளைத் தங்கள் தங்கள் நாடுகளிலே புதைத்து விட ஒருப்படுவார்களா....? வேறிடங்களிலே வெடிக்க வைத்துவேடிக்கை பார்க்க நினைத்தவர்கள் அந்த வேடிக்கைக்குக் காலத்தை எதிர்பார்த்த வண்ணமா அல்லவா இருப்பார்கள்....!

# மஹா சிவராத்திரி விழா

### கொழும்பு கொம்பனித்தெரு ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி கோயிலில்

மாசிமீ 8-ந் வ (20-2-55) ஞாயிற்றுக்கிழமை தொடக்கம் கொழும்பு கொம்பனித் தெரு ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி கோயிலில் முன்பு அறிவித்தபடி விசேட அபிடேக ஆராதனைகள் சொற்பொழிவுகள் இன்னிசை விருந்துகள் முதலியன மிகச் சிறப்பாக நடைபெற்றன.

### மன்னூர்ச் சைவ மகாசபை

மகா சிவராத்திரி தினமாகிய இன்று மன்னர் சைவ மகாசபையினது ஓர் விசேஷ பொதுக்கூட்டம் திரு. கே. ஜெயக்கொடி தலைமையில் நடைபெற்றது. கௌரவ மந்திரி சேர். கந்தையா வைத்தியநாதன் அவர்களால் கூட்டுப் பிரார்த்தனை நடத்தப்பெற்றது.

அதன்பின் ஸ்ரீசசர்னசிவாசாரிய சுவாமிகள் சமயச்சொற்பொழிவொன்றாற்றினர். சைவ மங்கையர் சபை ஒன்று ஸ்தாபனம் செய்யப்பெற்றது. பின்வருவோர் உத்தியோகத்தராகத் தெரிவு செய்யப் பெற்றனர் சிமாட்டி கந்தையா வைத்தியநாதன் அம்மையார் போஷகர், திருமதி மனோகரி சிவநாதன் தலைவி. திருமதி A. திருநாவுக்கரசு, திருமதி புவனேஸ்வரி ஜெயக்கொடி திருமதி மகேஸ்வரி திருமதி நாகேந்திரா உபதலைவிகள்; திருமதி மகேஸ்வரி காரியதரிசி, திருமதி பா. வேலுச்சாமி உப காரியதரிசி, திருமதி அ. கனகரத்தினம், செல்வி சித்தாமணி இணைத் தனதிகாரிகள், திருமதி பரமகுரு, திருமதி செ. முத்துசாமி, திருமதி இராசையா, திருமதி சோமசுந்தரம், திருமதி திருஞானம், திருமதி பா. சின்னத்தம்பி, திருமதி துரைராசா, திருமதி செ. சின்னத்தம்பி, திருமதி தெய்வேந்திரக் குமாரசாமி, திருமதி மாணிக்கராசா, திருமதி Dr. இரகுநாதர், திருமதி சா

[தொடர்ச்சி 5ம் பக்கம்]

# வரலாற்று மகிமைபெற்ற கீரிமலை

## சீர்சிறக்குஞ் சிவன் கோவில்

நமது தாய்நாட்டில் உள்ள ஒவ்வொரு கோவிலிலும், ஒவ்வொரு தேவஸ்தானம் உண்டு அந்த இடத்தில் அந்தக் கோவிலைப்பற்றிய வரலாறும், நாயன்மார்கள் திருவாய் மலர்ந்த—அதாவது, அந்தத் தேவாலயத்தில் எழுந்தருளியிருக்கும்—இறைவன் இறைவியைப்பற்றிய—தேவாரப் பதிகங்கள் அடங்கியதுமான சிறு நூல்கள், மிகவும் எளிய விலைக்குக் கிடைக்கும். இது போன்ற முறை எமது நாட்டின் இருக்கச்செய்வது சைவப் பெரியார்களின் முக்கிய கடமையாகும்.

சரித்திர காலந்தொட்டு எமது கீரிமலை மிகவும் புகழ் அடைந்த ஒரு புண்ணிய தீர்த்தக்கரை. இது இப்போது ஓர் நாகரீக நகரமாக நாளுக்கு நாள் மாறி வருகின்றது. நாகபூஷணி அம்பாளைத் தரிசிக்க வரும் எமது தென்பாகத் தன்பர்கள் கீரிமலை நீருற்றிலும் தாபமழுக்கினைகளை யழுக்காமல் வருவதில்லை. இந்தப் புண்ணிய தலத்தில் ஓர் உன்னதமான சிவ ஆலயம் இருப்பது நாம் அறிவோம். இவ்வாலயம் ஓர்கால அந்நியர் ஆட்சியால் அழிவுற்றதும் யாம அறிவோம்.

எம் முன்னோர்களின் தவச் சிறப்பாலும் யாழ்ப்பாண நகரில் வதியும் நன்மக்களின் திருவுளத்தாலும், ஷெ கீரிமலை நகுலேசுவர (சிவன் கோவில்) ஆலயம் சென்ற 7-2-55 ல் கொடியேற்று வைபவம் ஆரம்பமாகி, மகா சிவராத்திரி வரையும் விழா வைபவங்கள் நடந்து இனிது நிறைவுபெற்றன. பல சைவ அன்பர்கள் ஒவ்வோர் இரவும் இங்கு அரிய விஷயங்களை எடுத்து அடியார்களுக்கு அன்புடன் விருந்திட்டார்கள் சைவமகா சபைக் காரியதரிசியும் (திரு. வே. சந்தரப்பிள்ளை) அவருக்குப் பக்க உதவியாக இருந்த சைவச் சீலர் தி. கருணாகரர் அவர்களுக்கும் சைவ உலகம் என்றும் கடமைப்பட்டுள்ளது. வடமாகாண அதிபர் தொடக்கம் நீதவான், பளைக்கூடத் தலைவர், பத்திராசிரியர் வைத்தியர் முதலாம் பல சைவப் பெரியார்கள் மேற்படி ஆலயத்தக்குத் தினமும வந்து சைவப் பிரசங்கம செய்தார்கள். இதனை உன்னுந்தோறு மனம் புளகாங்கிதமல்லவா அடைகின்றது. வாழ்க சைவ அன்பர்கள்!

M. S. சிதம்பரப்பிள்ளை
தொல்லிப்பழை

இக்தச் சிவன் கோவில் பூரண நிலை அடைய இன்னும் பல்லாண்டுகாலம எடுக்கும். அதனை அவ்வாறு விடாது இவ்வாலயத்தை சமூதாச செய்வது எமது தனிப் பெரு கடமையாகும்.

காவலர் ஐயா என்று செல்லமாக அழைக்கப்படும எமது ஐந்தாம் குரவராகிய ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் அவர்கள், இதே சிவன் கோவிலைப் பற்றி 1878 வெகுதானிய வருடம் வைகாசி மாதம் 24. ஆந்திகதி வண்ணை பண்ணையிலிருந்து தமது திருக்கையால், ஓர் அறிக்கை விட்டார். அதனை அன்பர்கள் நூல் வாயிலாக அறியலாம் என எண்ணிவிடுத்தனம. அந்த அறிக்கையின் சுருக்கம் வருமாறு:

"இச்சிவதருமத்தின்பொருட்டுப் பணமாகவேனும், மரமகல் கண்ணும்பு முதலிய உபகரணங்களாகவேனும், அந்தியேட்டி செய்பவர்கள் தகுதியாகிய தானம் இரண்டேனும அந்தியேட்டி செய்யுங் குருமார்கள் அந்தியேட்டி ஒன்றுக்கு கால் ரூபாவேனும், கோவிலுக் கண்மையில் வசிக்கும் மக்கள் நெல் சிறுதானியம் காய்கனியேனும், கீரிமலையில் வைக்கும் உண்டிப் பெட்டியில் இயன்ற பணத்தையேனும் ஊரவர்கள் தங்கள் வீடுகளிலே போடப்படுகின்ற குட்டான்களிலே நாளொன்றுக்கு ஒருபிடி அரிசிபோட்டு அந்த அரிசியை மாத முடிவில்கொடுத்தும், தகுதியாகிய பணத்தொகை வைத்துக் கொண்டு சிவதருமம் செய்ய விரும்புகிறவர்கள் தங்கள் தங்களால் இயன்ற திருப்பணியேனும் செய்யவும்" என்பதாம்—

சைவ அன்பர்களே! எடுத்தற்கரிய இச்சட்டை அழியுமுன் இக்கோவிலுக்கு எம்மாலியன்ற உதவியைச் செய்தால் எமது தவப் புதல்வருடைய வேண்டுகோளை நிறைவேற்றியவர்களாவோம். உடல் பொருள் ஆவி மூன்றையும் அர்ப்பணம் செய்து இக்கோவிலைப் புதுப்பித்த சைவ உத்தமரும் அந்தணப் பெருந்தகையும் ஷெ கோவில் ஆதீனகர்த்தருமான பிரமஸ்ரீ குருசாமிக் குருக்கள் அவர்களின் ஆன்மா பெரும்சாந்தியடையுமல்லவா? "மன்னுமைகொள் சைவநீதி விளங்குக உலகம் எல்லாம்."

### வடபகுதிக்குத் துறைமுகம்

வட பகுதித் துறைமுகங்களிலொன்றாகிய காங்கேசன் துறையைத் தகுந்த துறைமுகமாக்குவதற்கு மந்திரி ஸ்ரீ பொன்னம்பலம் ஜயவிக்கிரம தீர்மானித்திருக்கிறாரென்றும், அதற்கு வேண்டிய பணம் கொடுக்குமபடி மந்திரி சபையைக் கேட்டிருக்கிறாரென்றும், அறியவருகின்றது.

# தம்மைத் தாம் தாழ்த்துவர் பெரியோர்

---:o:---

## சமயாசாரியர் காட்டிய சைவநெறி

---:o:---

"நாயேன் பாதினையறிந்து என் சொல்லிப் பாடுகேன்" என்று சுமபியாரூரர் கேட்கப் "பித்தனென்றே பாடுவாய்" என்று இறைவன் அடியெடுத்துக் கொடுக்க "பித்தா பிறைசூடி" என வரும் பாடலை முதன்முதல் சுந்தரர் அருளிச் செய்தார்.

பாற் கடலில் தோன்றிய அமுதம் குறைபாடுடையது, அது தன்னை உண்டார்க்கு மெய்ஞ்ஞானத்தை அளிக்கவில்லை. இறப்பையுந் தடுக்கவில்லை. ஆனால் இறைவனாகிய அமிர்தம் பேரின்பத்தை அளித்து மரணமிலாப் பெருவாழ்வையும் அருளுமாதலால் "உணர்வு தந்து உய்யக்கொண்டதோர் இலா அமுதே" என்பதாகக் கூறினார்.

இறைவன் நிர்க்குணனாயினுமே! குணப் பெருங்கடல் என்று கூறியது என்னையெனின் மாயா சம்பந்தப்பட்ட முக்குணங்களும் இறைவனுக்கு இல்லை என்ற பொருளே தவிர குணமே இல்லையென்பதல்ல. இறைவன் எண்குணத்தனவான்.

'சுந்தரர் 'நாயேன்' என்று பலவிடங்களில் (26 இடங்கள்) தன்னைக் குறிப்பிட்டுள்ளார். தான் பாடிய முதற்பதிகம் 2-ம் பாடலில் 'நாயேன் பலநாளும்' என்று ஆரம்பிக்கின்றார். முடிவில் பாடிய நொடித்தான் மலைப்பதிகத்துமுதற் பாடலிலும் தன்னை நாயேன் என்று குறிப்பிடுகின்றார். (நாவுக்கரசர் 37 இடங்களிலும் மாணிக்கவாசகர் 59 இடங்களிலும் தங்களை நாயேன் என்று குறிப்பிட்டுள்ளார்கள்) இவ்வாறு பெரியோர்களெல்லாம் தங்களை நாயேன் என்று குறிப்பிடுவதற்குரிய அடிப்படை யாது? எக்காரணம் பற்றியும் தங்களை எண்ணத்திலும் பெரியவர்கள் என்று கருதாதவர்கள் எவர்களோ அவர்களே பெரியோர்கள் என்று பேசப்படுபவர்களவர். அவர்கள் எப்பொழுதும் தங்களைத் தாழ்த்தியே கூறுவது இயல்பு. 'யாவர்க்குமேலாம் அளவிலாச் சிறுமையோன் யாவர்க்கும் கீழாம் அடியேன்" என்று மாணிக்கவாசகர் கூறுவதைக் கவனிக்க. "தாழ்ந்தோர் உயர்வரென்றும் மிகவுயர்ந்தோர் தாழ்வரென்றும் அறஞ் சூழ்ந்தோர் உரைக்கும் உரை" என்பது சிவப்பிரகாசர் கூற்று. தம்மைத் தாழ்த்திக் கொள்வோர் பிறரால் உயர்த்தப்படுவார் என்பதும் தம்மை உயர்த்திக்கொள்வோர் பிறரால் தாழ்த்தப்படுவார் என்பதும் இதன் கருத்து. அங்ஙனம் தாழ்த்திக் கூறுவார் நாயேன் என்று தங்களைக் கூறுவது நாயினிடத்துள்ள உண்டதையே கக்கி உண்ணுவதும் குறிக்கோளிலாது ஓடித் திரிவதும் ஆகிய இழி குணங்களைக் கருதியே.

'நாயிற் கடையேன்' என்று மணிவாசகர் பலவிடங்களில் தம்மைக் கூறிக்கொண்டது நாயினிடத்துள்ள ஒருசில நற்குணங்களும் தம்பாலில்லை என்று தம்மைத் தாழ்த்தி உரைத்ததாகும். நாயினிடத்துள்ள நற்குணங்களாவன, ஒரு பிடி அன்னமிட்டாரை உயிருள்ளளவும் மறக்காத நன்றியறிதலும், தன் தலைவன் எவ்வளவு கூட்டத்திலிருப்பினும் அவனை யறிந்து கொள்ளுந் திறனும்,

### ஞானசம்பந்தம்

இட்ட கட்டளையை இடரே வரினும் உடனே நிறைவேற்றமுள்ளமும், கோபத்தால் ஒருவேளை தன் தலைவன் ஊறு விளைவிப்பானாயினும் வாலைக் குழைத்து நன்றியே காட்டுவதும் முதலியன. மேலும் நாய் தனக்கு ஊறு செய்த பொருளை (கல், கம்பு முதலியன) குறித்து வருந்தாது அவற்றால் ஊறுவிளைவித்த மாற்றாரையே கோபிக்கும். (ஆனால் மனிதர்கள் தமக்குத் துன்பம் நேர்ந்தால் அது தங்கள் வினை வயத்தால என்பதைக் கருதாது துன்பம் செய்தாரை ஒறுப்பார்கள்).

ஞானசம்பந்தர், நாவுக்கரசர் ஆகிய இருவர் தேவாரங்களிலும், திருக்குறளிலும் ஊறித் திளைத்தவர் நமது சுந்தரர். இது அவரது பாடல்களால் நன்கு அறியப்படுகின்றது (இதற்குப் பல மேற்கோள்கள் காட்டப்பட்டன) 'அளவில தொலைக்கலுற்றாய்ந்து" என்ற தொடர் (நந்-6) இதனையே குறிப்பிடுகின்றது. 'பித்தா' என்றதும் 'பிறைசூடி' என்று சுந்தரர் பாடத் தொடங்கினதும் ஞானசம்பந்தர் தேவாரத்தில தாம்திளைத்திருந்ததே விண்ணோர் பெருமானே விகிர்தா விடையே பெண்ணாண் அலியாகும் "பித்தா பிறைசூடி" என்பது ஞானசம்பந்தர் வாக்கு.

தந்ததாட்கொண்ட தன்பின் சுந்தரர், இறைவன் திருக்கோவில் கொண்டு எழுந்தருளிய பல திருத்தலங்களையும் தரிசிக்கக் கருதித் திருநாவலூர் திருத்துறையூர் முதலிய தலங்கள் சென்று பதிகம் பாடித் தில்லையைத் தெரிசிக்க விரும்பிப் புறப்பட்டார். வழியில் திருவதிகைக்கு அருகில் வந்ததும் அப்பதி நாவுக்கரசர் உழவாரத் திருப்பணி செய்யப்பெற்ற தலமாதலால் அதனை மிதித்துச் செல்ல விரும்பாது அருகிலுள்ள சித்தவடம் என்னும் மடத்தில் தங்கினர். திருவதிகை வீரட்டானேசுவரரைச் சிந்தையிற் கொண்டவராய் உடன் வந்த அடியார்களோடு ஆங்குத் துயில் கொள்ளும்போழ்து இறைவன் முதிய அந்தணர் வடிவங்கொண்டு ஒருவரும் அறியாது உட்சென்று நம்பிகள் தலையில் திருவடி படும்படியாக வைத்துயிதத் துயில் கொள்வார் போன்றிருந்தார். சுந்தரர் விழித்து "அருமறையோய்! உன்னடிகளை என்றலைமேல் வைத்தனையே" என்று கேட்க "திசையறியாது காலை வைத்தது எனது மூப்பினால் நேர்ந்தது" என்று முதியவர் கூறினர். பின்னர் சுந்தரர் மறுபுறத்தில் தூங்க அங்கும் தம திருவடியை நீட்ட, "சுந்தரர் 'இங்கென்னைப் பலகாலும் மிதித்த நீ யார்?" என்று கேட்க "அறிந்திலையோ" என்று கூறி மறைந்தார்.

வேண்டுமென்றே பல தடவைகள் குற்றம் செய்வார்மீது கோபம் கொள்வது நம்மவர்கள் இயல்பு ஆனால் சுந்தரர் தமது கோபம் பலிக்குமிடமே எனினும் கோபம் கொள்ளாது "மிதித்த நீ யார்?" என்று கேட்டார். இது அவரது பொறுமையின் எல்லையைக் காட்டுவதாகும். "செலவிடத்துக் காப்பான் சினங்காப்பான் அல்லிடத்துக் காக்கிலென் காவாக்காலென்" என்ற குறள் ஈண்டு நினைவுறுத்தக்கது.

(தொடர்ச்சி 4-ம் பக்கம்)

## வருகிற ஆண்டில் பொதுத் தேர்தல்

ஐக்கிய தேசியக் கட்சி இளைஞர் சங்க வருடாந்தக் கூட்டத்திலே தலைமை வகித்துப் பேசும்போது வருகிற ஆண்டு ஆனி மாசத்தின் பின் பொதுத் தேர்தல் நடக்கக் கூடும் என்று சேர் ஜோன் கொத்தலாவல சொன்னாராம்.

## வெள்ளி விழாக் கொண்டாட்டம்

அளவெட்டி சதானந்த வித்தியாசாலையின் வெள்ளி விழாத்தினம் இவ்வாண்டு வைகாசிமாதத்தில் கொண்டாட இருப்பதால் அதை முன்னிட்டு சென்ற வியாழக்கிழமை (24-2-55) பிற்பகல் 4 மணிக்கு மேற்படி வித்தியாசாலையில் ஒரு காரிய நிர்வாகசபைக் கூட்டம் பாடசாலைத் தலைமை ஆசிரியர் திரு. அ. பொன்னுத்துரை அவர்களின் தலைமையில் நடைபெற்றது. வெள்ளி விழாவைச் சிறப்பாகக் கொண்டாடுவதற்கு பல உபசபைகளும் தெரியப்பட்டன.

# இந்தியாவிலும் இசைநாட்டிய ஈழத்துச் சான்றோர்

---0---

[ "புலவர்கோன்" புகல்வது ]

### 17. சி. வை. தாமோதரம்பிள்ளை

இவர் யாழ்ப்பாணத்திலே சிறுப்பிட்டி என்னும் கிராமத்திலே வேளாளர் மரபிலே வைரவநாத பிள்ளை என்பவர்க்குப் புதல்வராயுள்ளவர். தாயார் பெயர் பெருந்தேவியம்மை. இவர் சிறுபிராயத்தில் ஆத்திசூடி, கொன்றைவேந்தன் முதலிய நீதிநூல்களையும் நிகண்டு முதலிய கருவி நூல்களையுங் கற்றுவந்தார். பின்னர், சுன்னாகத்திலிருந்த முத்துக்குமார கவிராயரிடத்துத் தமிழ் இலக்கண இலக்கியங்களைக் கற்று வல்லுநரானர்.

தெல்லிப்பளையிலுள்ள அமெரிக்க பாதிரிமாருடைய ஆங்கிலவித்தியாசாலையில் ஆரம்ப ஆங்கிலக் கல்வியும், அதன் பின்னர் வட்டுக்கோட்டையில, இப்பொழுது யாழ்ப்பாணக் கல்லூரியென வழங்கும் உயர்தரக் கலாசாலையில் உயர்தர ஆங்கிலக் கல்வியுங் கற்றார். சென்னைச் சர்வகலாசங்கத்தார் முதன் முதல் நடாத்திய பி. ஏ. பரீட்சையில் இத் தாமோதரம்பிள்ளையும் யாழ்ப்பாணத்தவரும் இவரது சகபாடியும் ஆகிய ஹரல்ட் விசுவநாதபிள்ளையும் மாத்திரமே சித்தியடைந்தனர். அதன் பின் இவர் அக்காலத்திற் கோப்பாயிலிருந்த போதனா வித்தியாசாலையிற் சில காலம் தலைமையாசிரியராக இருந்த பின்பு பேர்சிபல என்னும் பாதிரியாரால் சென்னையில நடாத்தப் பெற்று வந்த "தினவர்த்தமானி" என்னும் பத்திரிகையின ஆசிரியராகக் கடமையாற்றினர் அதன்மேல், கள்ளிக்கோட்டையிலுள்ள அரசினர் வித்தியாசாலையிலே தலைமையாசிரியராகக் கடமையாற்றினர் புதுக்கோட்டையில உயர்தர நீதிமன்றத்து நீதிபதியாக அரசினரால நியமிக்கப் பெற்றார். சென்னைச் சர்வகலா சங்கத்தார் தங்கள் பரீக்ஷகருள் ஒருவராக இவரை நியமித்தனர். இவருடைய கல்வித் திறமையையும் கடமையாற்றுந் திறமையையும் பாராட்டி, சென்னை அரசாங்கத்தார் இவருக்கு "ராவ்பகதூர்" என்னும் பட்டத்தை அளித்து இவரைச் சன்மானித்தனர். இவர் காலத்திலே தென்னிந்தியாவிலும், யாழ்ப்பாணத்திலும் விளங்கிய வித்துவான்கள் புலவர்கள் பண்டிதர்கள் உரையாசிரியர்கள் முதலாம் அறிஞருடன் இப்பெரியார் கலந்துறவாடி அவர்களுடைய நட்பைப் பெற்றிருந்தார். இவரது வாழ்க்கையில் அதிக காலம் தென்னிந்தியாவிலேயே கழிந்ததெனலாம்.

சிலகாலம் பாதிரிமாருடைய சகவாசத்தினால் கிறீஸ்துமதத்தை அநுசரித்தும், சைவமதத்திற்கு மாறான கண்டனங்களை எழுதி வெளியிட்டும் வந்த இந்த அறிஞர், பின்னர் ஸ்ரீலஸ்ரீ நாவலரவர்களுடைய பிரசங்கங்களையும் அந் நாவலப் பெரியார் அக் காலத்தில் எழுதி வெளியிட்டு வந்த கிறீஸ்துமத கண்டன நூல்களையும், முறையே கேட்டும், படித்தும் சைவசமயமே மெய்ச் சமயமென உணர்ந்து, நாவலர் சொற்படி சுத்தி செய்து உண்மையான சைவசமயியானர். விதிப்படி ஆன்மார்த்த பூசையும் செய்துவந்தார். "சைவமகத்துவம்' என்னும் சிறந்த நூலையும் இயற்றினர். நாவலரைப் பின் பற்றி, தாமும் ஏட்டுப் பிரதிகளாக வுள்ள, பழைய இலக்கண, இலக்கியங்களை, பிழையறப் பரிசோதித்து அச்சிட்டு வெளிப்படுத்தினர். இப் பேரறிஞர் அச்சிட்டு

தொடர்ச்சி 4-ம் பக்கம்

மானிப்பாய் மிஷன் வைத்தியசாலைக்கு

## விசேஷித்த புதிய வைத்தியர்

**மானிப்பாய் மிஷன் வைத்தியசாலைக்கு பிரபல புதிய வைத்தியர் இருவர் வந்திருக்கிறார்களென அறிந்து சந்தோஷப்படுகிறோம் :—**

Dr. W. A. நாயுடு F. R. C S அவர்கள் F. R. C. S பட்டம் பெற்றது மாத்திரமல்ல, Berlin, Vienna முதலிய ஐரோப்பிய நகரங்களில் சத்திர வைத்தியம் பயின்றவர். பின் இந்திய அரசியலில் கடமை பார்த்தவர். ஐந்து வருடங்களாய் சென்னைப் பட்டினத்திலுள்ள Staneley வைத்திய கல்லூரியில், சத்திர வைத்திய (Openative Surgery) வைத்திய மாணவருக்குக் கற்பித்தவர். சமீபத்தில் சென்னைத் தேசாதிபதி ஸ்ரீ பிரகாச அவர்களுக்குச் சத்திர வைத்தியஞ் செய்தவர். Dr. நாயுடுவும் Mrs. நாயுடுவும் சென்ற திங்கட்கிழமை மானிப்பாய்க்கு வந்து சேர்ந்தனர்.

இவரோடு Mrs. சத்தியா M. B. B. S. உம் வந்திருக்கிறா. இவ சென்னை பட்டினத்தில் கஸ்பா ணி ஆஸ்பத்திரியில் பிரசவ வைத்தியம் செய்தவர் — இவ சென்ற புதன்கிழமை வந்து சேர்ந்தனர்.

M. 234. 25-2, 4-3, 11-3.


# இந்தியாவிலும் இசைநாட்டிய ஈழத்துச்சான்றோர்

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

வெளிப்படுத்திய நூல்களிற் பிரதமானவை:—

தொல்காப்பியம் எழுத்ததிகாரம் நச்சினார்க்கினியருரை, பொருளதிகார உரை, இறையனாரகப் பொருளுரை, இலக்கண விளக்க உரை, வீரசோழிய உரை, சூளாமணி தணிகைப் புராணம் முதலியனவாம். இவர் தாமாக இயற்றிய நூல்கள் மேலே சொல்லப்பட்ட சைவ மகத்துவம், கட்டளைக் கலித்துறை, சூளாமணி வசனம் ஆகியன வசனநடை மாத்திரமல்லாமற் செய்யுளியற்றுவதிலும் சிறந்தவர். இவர் தமிழ்மொழி விருத்தி செய்யும்படி பழைய தமிழ் நூல்கள் பலவற்றைப் பரிசோதித்து அச்சிட்டதோடமையாது, யாழ்ப்பாணத்தில் உள்ள ஏழாலை என்னுங் கிராமத்திலே சிறந்த ஒரு தமிழ் வித்தியாசாலையையும் தாபித்து நடத்தி வந்தார்.

**18. சீ. வை. சின்னப்பாபிள்ளை**

இவர் மேற்படி தாமோதரம்பிள்ளையின் தம்பியாராவர். இவரும் தமிழ்மொழி நன்கு அறிந்தவர். இலகுவான இனிய தமிழ் வசனநடை எழுதும் ஆற்றல் உள்ளவர். தென்னிந்தியாவிற் பலகாலம் அரசாங்க உத்தியோகம் வகித்துக் கொண்டு வாழ்ந்தவர் இவரெழுதிய வீரசிங்கன் கதை உதிரபாசம்என்னும் வசன நூல்கள் எவரும் விரும்பிப் படிக்கத் தக்கன. இவர் கவி இயற்றுந் திறமையுமுடையவ ரென்பது இவரது தமையனார் மீது பாடிய இரங்கற்பாவாகிய,

"கற்றார்க் கினிமையும் சைவர்க்கு
மாண்பும் கருது செல்வம்
அற்றார்க்குதவியும், கல்வி
கற்போருக் கரும்பொருளும்
உற்றார்க்கு கீர்த்தியும் நட்டார்க்
குறுதியுடனறிவும்
பற்றாருக்கச்சமுந் தாமோதரன்
பின் பறந்தனவே"

என்னுங் கவியினால் அறியலாகும்.

# தம்மைத் தாம் தாழ்த்துவர் பெரியோர்

(3 ம் பக்கத் தொடர்ச்சி)

"பித்தனை நீ யார்?"என்று பிரசுரத்தில் பதிப்பித்துள்ளனர். அவ்வாறிருப்பின் பித்தநினால் சினம் உண்டாகி அது காரணமாக வினவினார் என்று பொருள் கொள்ள நேரும். அது சுந்தரரது பொறுமையைக் காட்டாது. சுந்தரர் "நுணங்கிய கேள்வி மேலோன் (தடுத்-14) என்பது சேக்கிழார் வாக்கு. ஆதலால் இவர் வாயினின்றும் வணங்கிய மொழியே வருதல் திண்ணம். எனவே சுந்தரர் சினங் கொண்டாரில்லை என்பது, உறுதி செய்யப் பெறுகின்றது. தமது முடியில் திருவடியை வைத்தருளியவர் சிவபெருமானே என்பதை யறிந்த சுந்தரர், வருந்தித் "தம்மானை யறியாத சாதியார் உளரே" என்ற திருப்பதிகம் பாடி அங்கிருந்து அகன்று திருமாணிகுழி, திருத்தினைநகர் முதலிய தலங்களை வணங்கிப் பதிகம் பாடித் தில்லையை அடைந்தார். ஈண்டு கனகசபையில் ஆடும் பெருமானை ஐம்பொறிகளின் அறிவெலாம் கண்களே கொள்ளவும், கரணங்கள் நான்கும் சிந்தையேயாகவும், குணமொரு மூன்றும் திருந்து சாத்துவிகமேயாகவும் ஒன்றி நின்று வழிபட்டு மாறிலா மகிழ்ச்சியில் மலர்ந்து "இறைவனே மண்ணிலே வந்து உன்றன் திருநடம் கும்பிடப் பெற்ற பிறவியே எனக்கு இன்பந் தருவதாயிற்று" என்று பதிகம் பாடிப் பணிந்தார்.

"உன்றன் திருநடம் கும்பிடப்பெற்று மண்ணிலே வந்த பிறவியே என்பதை "மண்ணிலே வந்து, உன்றன் திருநடம் கும்பிடப் பெற்ற பிறவியே" என்று விகுதி பிரித்துக் காட்டல் வேண்டும்.

மண்ணிலே தோன்றும்படி பணித்தருளியதும் மானிடப் பிறப்பை எண்ணிக் கலங்கிய சுந்தரர் தில்லை நாயகன் திருக்கூத்துக் கும்பிடப்பெற்றதால் அப்பிறவியே சிறந்ததாயிற்று என்று குறிப்பிடுகின்றார். "இனித்தமுடைய எடுத்தபொற் பாதமும் காணப்பெற்றால், மனிதப் பிறவியும் வேண்டுவதே இம் மாநிலத்தே" என்பது நாவுக்கரசர் வாக்கு. இக்குப் பிறப்பாகிய கருவி எதற்காக இறைவனால் கொடுக்கப்பட்டதோ அதற்குரிய செயலில் அதுபயன்படும்போது போற்றப்படுவதும் அதற்கு மாறான செயலில் பயன்படும்போது தூற்றப்படுவதும் பெரியோர்களுடைய வாக்கில் வைத்துக் காணலாம். "என்னை வகுத்திலேயேல் இடும்பைக்கு இடம் யாது சொல்லே" என்று அருளிய நாவுக்கரசர் மேலே காட்டிய "மனிதப் பிறவியும் வேண்டுவதே" என்று கூறியருளியதோடு "இன்னம் பாலிக்குமோ இப்பிறவியே" என்றும் "வாய்த்தது நம் தமக்கு ஈதோர் பிறவி மதித்திடுமின்" ? என்று பாடியதும் மேற் காட்டியதற்குச் சான்றாகும்.

தில்லைத் தெரிசனம் எத்துணைச் சிறப்புடையது என்பதைக் குமரகுருபர சுவாமிகள் அருளிய சிதம்பர மும்மணிக கோவையின் முதல் அகவற் பாவினால் அறியலாம்.

# தேவார திருவாசக முழக்கம்

## திருக்கோயில்களில் சைவ இளைஞர்கள் செய்வார்களாக

[ தென்மயிலை, திரு. செ. கோவிந்தசாமி வரைவது ]

சிவபெருமானால் அருளிச் செய்யப்பட்ட நூல்கள் வேதம் — சிவாகமம் என்னும் இரண்டுமாம். இந்நூல்களுடன் நாம் பொன்னே போல் போற்றி ஓதித்து வரும் நூல்கள் திருமுறைகளாகும். திருமுறைகளுள் தேவாரமும் திருவாசகமும் தமிழ்வேதம் என்று சொல்லப்படும். தமிழர்களுக்கு உயிர்நாடியாக அமைந்த நூல் தேவார திருவாசகமாகும் —புறமதத்தவர்களும் திருவாசகத்தைப் பாராயணம் பண்ணுகிறார்கள்.

சைவ எல்லப்ப நாவலர் சுவாமிகளும் "தேவாரதிருவாசகமும் - நால்வர் பொற்றாளும் எம் முயிர்த்துணையே" என்றார்கள். இன்னும் எத்தனையோ மகான்கள் தேவாரதிருவாசகாதிகளைப் பொன்னேபோல்போற்றிப் பாராயணம் செய்திருக்கிறார்கள். தற்காலத்தில் சைவ உலகில் தேவார திருவாசகமாதியன ஒதுக்கப்பட்டிருக்கின்றன. திருவருட் பாடல்களைப் படிப்பதற்கு நாகரீகம்—காலப்போக்கு ஆராய்கிறார்கள் காலப்போக்கு, முற்போக்கு என்ற காரணத்தைச் சிலர் அடிப்படையில் வைத்துக்கொண்டு நவீன மருட்பாக்களைப் பாடுகிறார்கள்

பிரார்த்தனைக் கூட்டம் வைத்துச் சமயம் பேசும் நவீன சமரச வாதிகளது உள்ளத்திலும் சத்சங்கத்தவர்களது உள்ளத்திலும் அருட்பாடல் அருட்சோறவில்லை — நீதி நெறிகளல்லவா இவ்வுலகிலுள்ள அனைவரையும் ஒவ்வொரு விமர்சனமாகவே கொள்ளவேண்டியிருக்கிறது வருணாச்சிரம நெறிகளும் நீதி தவறிவிட்டன. பண்டைய அரசர்களும் மக்களும் நீதிமான்களாய் விளங்கினமைகானன்றோ சமயாசாரியார்களும் சந்தான குரவர்களும் சேக்கிழார் பட்டினத்தடிகள், தாயுமானவர் குமரகுருபரர் போன்ற பெருமக்களும் தாங்கள் சைவத் தலைவர்கள் என்றும் சுவாமிகள் என்றும் தலைகாட்டினார்கள்.

நீதி நெறி அருகிவரும் இக்காலத்தில் முன்னைய பெரியார்கள் போல இன்று தலைகாட்டுவது அசாத்தியமாகும். இன்னும் குருலிங்கசங்கம நெறிகள் சீர் குலைந்துவிட்டன. இதனால் இளைஞர்களாகிய மாணவர்கள் தம் மனம் போன போக்கின்படி காலத்தைக் கழிக்கிறார்கள். குருகுலக்கல்வி அழிந்துவிட்டது. இன்று பள்ளி மாணவர்கள் தேவாரம்பாட வெட்கம் அடைகிறார்கள் ஆலயங்களில் நடைபெறும் உற்சவதினங்களில்தேவார திருவாசக முழக்கம் இல்லாது ஒலிபெருக்கிகள் மூலம் சினிமாப் பாட்டுகளைப் பாடுகிறார்கள். இவ்விதம் சைவ மக்கள் தம் வாணாளை வீணாளாக்குகின்றனர்.

எங்கள் ஆறுமுகநாவலர் பெருமான் அவர்கள் சென்னையில் வசிக்குங்காலத்தில் தேவாரமோதுதல் குறைந்து கொண்டு வருதலைக் கண்டு அவர் மனம் கொதித்தெழுந்தது தேவாரத்தை விடுத்து வேறு மருட்பா ஓதுகிறார்கள் எனக் கண்டனம் செய்ததினால் பல வழக்குகளும் நாவலர் பேரில் நடைபெற்றன. இவ்வளவு தூரம் நாவலர் ஐயாவுக்கு ஆர்வம் இருந்தது என்றால் அவர் வழித்தோன்றல்களாகிய பள்ளி மாணவர்கள் தேவார திருவாசகங்களைப் புறக்கணிப்பது வருந்துதற்குரியதாகும்.

மூன்று வயதில் தேவாரம் பாடிய ஞானக்குழந்தையாகிய ஆளுடைய அடிகள் அருளிய தேவாரத்தை இளைஞர்களும் ஏனையோரும் படிக்கத் தவறுதல் பெரும் பாவமாகும். ஆதலால் சைவ மாணவர்கள் எல்லோரும் தம் கிராமக் கோயில்களில் தேவார முழக்கம் செய்யவேண்டும். அதுவுமல்லாமல் ஒவ்வொரு மாணவனும் நாவலர் அன்பில் திளைத்து — இளைஞராய்த் திகழ்ந்த சிவபாத சுந்தரனாரைப்போல் சைவ முழக்கம் செய்யவேண்டும். இதற்கு சைவ இளைஞர்கள் உற்சவம்நடைபெறும் புராதன தலங்கட்கு தேவார திருவாசக முழக்கம் செய்ய முன்வருவார்களாக!

### சிவராத்திரி தினம்

சென்ற 20-2-55 ஞாயிற்றுக்கிழமை காலைநகர் சிவகாமி அம்பாள் பிரார்த்தனைச் சபையினர் உண்ணாவிரதம் பூண்டு இறைவழிபாடு செய்தனர். கோயிலில் விசேட பூசைகளும் நடைபெற்றன. இரவு சைவத் திருமுறைகள் ஓதப்பெற்றன. சுவாமிக்கு நான்குசாமமும் ஆராதனைகள் நடைபெற்றன. காலையில் விரதம் அனுஷ்டித்தோர் அனைவரும் சமுத்திர தீர்த்தம் ஆடி இறைவனை வழிபட்டனர்.

மானிப்பாய் மிஷன் வைத்தியசாலைக்கு

## விசேஷித்த புதிய வைத்தியர்

**மானிப்பாய் மிஷன் வைத்தியசாலைக்கு பிரபல புதிய வைத்தியர் இருவர் வந்திருக்கிறார்களென அறிந்து சந்தோஷப்படுகிறோம் :—**

Dr. W. A. நாயுடு F. R. C. S. அவர்கள் F. R. C. S. பட்டம் பெற்றது மாத்திரமல்ல, Berlin, Vienna முதலிய ஐரோப்பிய நகரங்களில் சத்திர வைத்தியம் பயின்றவர். பின் இந்திய அரசியலில் கடமை பார்த்தவர். ஐந்து வருடங்களாய் சென்னைப் பட்டினத்திலுள்ள Staneley வைத்திய கல்லூரியில், சத்திர வைத்தியப (Openative Surgery) வைத்திய மாணவருக்குக் கற்பித்தவர். சமீபத்தில் சென்னைத் தேசாதிபதி ஸ்ரீ பிரகாச அவர்களுக்குச் சத்திர வைத்தியராயிருந்தவர். Dr. நாயுடுவும் Mrs. நாயுடுவும் சென்ற திங்கட்கிழமை மானிப்பாய்க்கு வந்து சேர்ந்தனர்.

இவரோடு Mrs. சத்தியா M. B. B. S. உம் வந்திருக்கிறா. இவ சென்னை பட்டினத்தில் கஸ்பாணி ஆசுப்பத்திரியில் பிரசவ வைத்தியம் செய்தவர்—இவ சென்ற புதன்கிழமை வந்து சேர்ந்தனர்.

M. 234. 25-2, 4-3, 11-3.


## தமிழ் இலக்கிய உலகில் இமயம் போன்ற அறிஞர்

1-ம் பக்கத்தொடர்ச்சி

ப்பைப் பற்றிக் கால்டுவெல் என்ற ஆங்கிலேயர் அழகான நூல் ஒன்று எழுதினார். திராவிட மொழிகளின் ஒப்பியல்' (Comparative Philology of Dravidian Languages) என்பது அந்த நூலின் பெயர் அதை இன்றும் சிறந்த நூலாகப் புலவர்கள் கொண்டாடுகிறார்கள். அதை எழுதினவருக்கு எட்டுத்தொகை, பத்துப்பாட்டு ஆகியவை கிடைக்கவில்லை. அந் நூல்களின் அமைப்பை அவர் அறியார்.

இன்றோ சங்ககாலத் தமிழைப்பற்றியும், நூல்களைப்பற்றியும் பலப்பல நூல்கள் வந்திருக்கின்றன. பலவகையான ஆராய்ச்சிகள் நிகழ்ந்து வருகின்றன. தமிழ் இலக்கியத்தின் பொற்காலமென்று சங்ககாலத்தைப் போற்றிப் பாராட்டிப் பெருமிதத்துடன் பேசுகிறோம். தமிழர் பண்பாடு, தமிழர் நாகரிகம், தமிழர் மரபு என்று நமக்குரிய தனிச் சிறப்பைப் பல மேடைகளில் புலவர் பெருமக்கள் பேசுகிறார்கள்; எழுதுகிறார்கள். பாரத நாட்டில் உயிருடன் வழங்கி வரும் மொழிகள் யாவற்றிலும் பழையது. இலக்கிய வளம் பொருந்தியது இலக்கண வாமபுடையது. எவையும் வழங்கத்தக்க செல்வமுடையது என்றெல்லாம் மற்றவர்களும் ஒப்புக்கொள்ளும் நிலை தமிழுக்குக் கிடைத்திருக்கிறது.

தமிழ்த் தாத்தாவின் அரும் பெருந் தொண்டே இத்தனை உயர்வுக்கும் மூலகாரணமென்பதைத் தமிழ்ப்புலவர்கள் அறிவார்கள். தமிழ் வரலாற்றில் ஐயரவர்களுக்கு என்று ஒரு தனிப்பகுதி இருக்கும் என்பதில் சந்தேகமே இல்லை.


### விளம்பரம்

கோண்டாவில் கிழக்கு சுப்பிரமணியம் சந்திரசேகரம்பிள்ளையும் பெண் நாகரத்தினமும் அச்சுவேலி தெற்கு K. சுந்தரமூர்த்தி பெண் மகாலட்சுமியுமாகியாகிய நாங்கள் பொதுசனத்திற்குக் கொடுக்கும் அறிவித்தலாவது:

யாழ்ப்பாணப் பெரிய கோட்டு 1244-ம் இலக்கத் தத்தல வழக்கில் வெளிவந்த உத்தரவாணைப்படி தெல்லிப்பழை மயிலிலுள்ள உத்தரவாளையாளரும் உத்தரவு பெற்ற விற்பனையாளரும் ஆகிய சின்னத்தம்பி சங்கரப்பிள்ளை வெளியிட்டு விளம்பரப்படுத்திய 1955 தை மீ (January) 25ந் திகதிகொண்ட விற்பனை விளம்பரத்தில் மூன்றும் காணியாய் விற்பனைக்கு விளம்பரப்படுத்தப்பட்டிருக்கும் பத்தார் தெற்கு இறை மந்திரிமனையும் குறிக்கட்டும் கிளைப்பாய்ப்பு முப்பத்தைந்தில் மேற்கூறிய எங்களுக்கு முப்பத்தாறில் இருபத்தொன்பது (29/36) பங்கு சொரியலாய் உளதென்றும் குறித்த காணியில் முப்பத்தாறில் ஏழு பங்கு (7/36) க்கு மேலதிகமாகப் பங்கு வாங்குவோர் தங்களை உத்தரவாதமாக வைத்துக் கொண்டே தங்களுக்கு நட்டத்தைத் தேடிக்கொண்டே வாங்குவார்களென்றும் எச்சரிக்கை செய்கின்றோம்.

S. Sandrasegarampillai
S. Nagaratnam
S. Mahaledchumy

M 36 25


அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில்

## நாவலர் கலாநிதி ச. சோமசுந்தர பாரதியாருக்குப் பாராட்டு விழா

அண்ணாமலைநகர் மார்ச் -15

சென்ற 9 ஆம் திகதி நடைபெற்ற அண்ணாமலைப் பல்கலைக் கழக வெள்ளி விழாவின் போது அண்ணாமலைப் பல்கலைக் கழக முதனன் தமிழ்ப் பேராசிரியராகிய கலாநிதி ச. சோ. பாரதியாருக்குப் பல்கலைக் கழகத்தார் "கலாநிதி" பட்டம் வழங்கியிருப்பது தமிழ் மக்கள் எல்லோருக்கும் தனிப்பெரும் மகிழ்ச்சியைத் தருவதாகும். இச் சிறப்பைக் கொண்டாடுவதற்காக இம் மாதம் 28 ஆம் திகதி திங்கட்கிழமை மாலை 4-30 மணிக்கு அண்ணாமலைப் பல்கலைக்கழக பட்டமளிப்பு விழா மன்றத்தில், அண்ணாமலைப் பல்கலைக் கழக தமிழ் மன்றம், இலக்கியக் கழகம் ஆகிய இவற்றின் ஆதரவில் ஒரு பாராட்டுக் கூட்டம் நடைபெறும். இவ் விழாவுக்குப் பல்கலைக்கழக இணை வேந்தர் கலாநிதி ராஜா சர் முத்தையாச் செட்டியார் B.A. D.Litt. M.L.A; அவர்கள் தலைமை தாங்கிப் பாரதியாருக்கும் பொன்னாடை போர்க்க இசைந்துள்ளார்கள்.

இவ் விழாவில் சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ்த் துறைத் தலைவர் "சொல்லின் செல்வர்" திரு. இ. பி. சேதுப் பிள்ளை அவர்கள் B.A; B.L; சென்னை மாநிலக் கல்லூரித் தமிழ்த்துறைத் தலைவர் பன்மொழிப் புலவர் பேராசிரியர் தெ. பொ. மீனாட்சிசுந்தரனார் அவர்கள் M.A; M.O.L; சென்னை முன்னாள் மேயர் திரு. இராமசாமிநாயுடு அவர்கள், புதுவை புரட்சிக் கவிஞர் பாரதிதாசன், அண்ணாமலைப் பல்கலைக்கழக ஆராய்ச்சித் துறைத் தலைவர் பேராசிரியர் வித்துவான் கோ. சுப்பிரமணியபிள்ளை அவர்கள் M.A; B.L. தமிழ் மன்றச் செயலாளன் சி. செ. சோமசுந்தரம், இலக்கியக் கழகச் செயலாளன் கா. பிச்சைமுத்து ஆகியோர் பாராட்டுரை வழங்குவார்கள். அண்ணாமலைப் பல்கலைக் கழகத் தமிழ்த் துறைத் தலைவர் பேராசிரியர் பண்டித வித்துவான் இலெ. ப. கரு. இராமநாதன் செட்டியார் அவர்கள் வரவேற்புரை நிகழ்த்துவார்கள். வித்துவான் திரு. மு. அருணாசலம்பிள்ளை அவர்கள் நன்றியுரை கூறுவார்கள்.

ஒரு பெரிய தமிழ்விழாவாக இவ்விழாவைச் சிறந்த முறையில் நடத்தத் தமிழ்மன்றத்தாரும் இலக்கியக் கழகத்தாரும் ஏற்பாடுகள் செய்து வருகின்றார்கள்.

—

### மகா சிவராத்திரிவிழா

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

வணமுத்து திருமதி ஆனந்த நடராசா ஆகியோர் திருவாசக சபை உதவினர்.

இக்கூட்டத்திற்குகொழும்பு சைவமங்கையர்கழகத்தின் தலைவியுடன், யாழ்ப்பாணம் சைவ பரிபாலனசபை, கொழும்பு விவேகானந்தசபைக் காரியதரிசிகளும், மற்றும் பல சைவச் சபைகளின் பிரதிநிதிகளும் சமுகமளித்தனர்.

- கடித.

## அணிந்துரை அரங்கம்

### சமயபோதச் சொற்பொழிவுகள்

இது தருமபுர ஆதீனப் புலவர் வித்துவான் திரு முத்து சு. மாணிக்கவாசக முதலியார் அவர்களால் தொகுக்கப் பெற்று வித்துவான் ஸ்ரீமத் சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகளால் குரு மகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகளின் அருளாணையின்படி ஆணி மூலத் திருநாள் நினைவு மலராய்ப் பதிப்பித்து வெளியிடப்பெற்றது. வேதம், உபநிடதம், ஆகமம், திருமுறை இதிகாசம் புராணம் என்பனவாம் பல பொருள்களில் பேரறிஞர்களால் ஆற்றப் பெற்ற அறிவுரைகளைத் தன்னகத்தே கொண்டது; தருமபுர ஆதீனம் ஆற்றும் உரிய சைவத் தொண்டுகளில் எது பெரியது எது மற்றது என்று எண்ணவிடாது எதிரில் நிற்கும் பெருஞ் சிறப்பு வாய்ந்தது.

### திருவெம்பாவை தெளிவுரையுடன்

இது தருமபுர ஆதீனம் இரண்டாவது குரு மகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ ஆனந்த பரவச தேசிக சுவாமிகள் குருபூசை விழா மலராய் தருமபுர ஆதீனம் இருபத்தைந்தாவது மகா சந்நிதானம் அவர்களின் திருவுள்ளத்தின்படி வெளியிடப் பெற்றது. உரைகள் பிற இருப்பினும் தெளிவுதரும் நோக்கத்துடன் இது முன்வந்துள்ளது.

———

### இலங்கைச் சரித்திர அறிவின்மை உண்டாக்கும் சுவம

———

தமிழ்மக்கள் தமிழ்மொழி கலாசாரம் என்பவை பற்றிய பிழையான எண்ணங்களுக்கு இலங்கைச் சரித்திரத்தைச் சரியாக அறியாததே காரணம். விஜயா மகிந்தா ஆகியோர்வருவதற்கு மிக நீண்ட காலத்திற்கு முன்பே தமிழ்மொழியும் தமிழ் இலக்கியங்களும் இலங்கையில் நிலைபெற்றிருந்தன என்பதற்குச் சரித்திரச் சான்றுகள் உள என்றும், ஆகையினாலே இவற்றைப் பாதுகாக்கும்படியும் தங்கள் உரிமைகளைத் தரும்படியும் தமிழ்மக்கள் கேட்பது வகுப்புவாதமாகமாட்டாதென்றும் வண்ணை வைத்தீஸ்வர வித்தியாலயத்தில் நடந்த புத்தக அரங்கேற்ற விழாவிற் பேசும் போது வண. கலாநிதி தனிநாயகம் அவர்கள் கூறினார்.

———

### அரசாங்க வைத்திய நிலையத்தில் அருவருக்கத்தக்க நிலைமை

———

யாழ்ப்பாணம் அரசாங்க வைத்திய நிலையத்தில் அருவருக்கத்தக்க நிலைமைகள் பல நிலவுகின்றனவாம். அவற்றுள் மேலான தொன்று பற்றிக் காட்டுத் தீபோற் கதை எங்கும் பரவுகின்றது.

பிரசவப் பகுதிக்கு வைத்திய அதிகாரியாய் ஒரு அம்மையார் வந்திருக்கின்றனராம். அந்த நிலைமையிலிருக்கும் நோயாளிக்கும் உதவிக்கு ஒருவரும் நிற்கக்கூடாது, பெண்கள் இரண்டு பிள்ளைகளுக்கு மேல் பெறக்கூடாது, வைத்திய நிலைய உணவேயன்றி வீட்டு உணவென்பது கண்ணிற்காணவுமகூடாது, என்று அந்த அம்மையார் உத்தரவிடுகின்றனராம், வன்னெஞ்சமுடைய ஆண் வைத்தியர்களினுமகூடின வன்னெஞ்ச முறையில் யாவருடனும் எப்பொழுதும் இவ்வம்மையார் நடந்து கொள்ளுகின்றாராம்.

சுகாதார மந்திரிக்கு இவை பற்றி முறையீடுகளே போகத் தொடங்கிவிட்டனவாம்.

———

### மேல் நீதிமன்ற வழக்கு விண்ணப்பங்கள்

———

நீதிபதிகளின் தீர்ப்புகளுக்கெதிராக மேல் நீதிமன்றத்திற்கு விண்ணப்பஞ் செய்யும் வசதி இப்பொழுது வழக்காளிகள் நியாயவாதிகள் ஆகியோரால் பிழையாக உபயோகப்படுகின்றதாம். மேல் நீதிமன்றத்திற்கு விண்ணப்பஞ் செய்து நியாயமின்றி நினைத்தபடி விண்ணப்பத்தை மீட்டுப் பெற்றுக் கொள்ளவிடாது தடுத்தற்கு நீதி மந்திரி பகுதியார் வழிவகைகள் ஆலோசிக்கின்றனர் நீதிபதிக்கு நியாயங்காட்டியே இனி விண்ணப்பங்களை மீட்டுப் பெறக்கூடியதாய் வருமாம்.


அகில இலங்கைச்

## சைவ சமயபாடப் பரீட்சை 1954

ஆரம்ப பிரிவு — அகில இலங்கைப் பரிசில்கள்

முதற் பரிசில்

ஆண் சு. சந்திரமௌலீஸ்வர ஐயர் கோப்பாய் சரவணபவானந்த வித்தியாசாலை

பெண் மு. மகேஸ்வரி வியாவில் சைவபரிபாலன வித்தியாசாலை

இரண்டாம் பரிசில்

ஆண் இ. கந்தவேல் வேலணை சைவப்பிரகாச வித்தியாசாலை

பெண் சு. இராஜேஸ்வரி காரைநகர் பொன்னம்பல வித்தியாசாலை

மூன்றாம் பரிசில்

ஆண் வி. செல்லையா காரைநகர் மாணிக்கவாசக வித்தியாசாலை

பெண் செ. கிரிதாதேவி வல்வெட்டித்துறை சிவகுரு வித்தியாசாலை

## தேகவியோகம்

இணுவில் கோவிலடியைச் சேர்ந்த காலஞ்சென்ற திரு சி. சபாரத்தினம் அவர்களின் பாரியாரும் திரிகோணமலைக் கச்சேரிப் பிரதம லிகிதர் திரு ச. அமிர்தலிங்கம் அவர்களின் தாயாரும் காலஞ்சென்ற வழக்கறிஞர் திரு. க. பதஞ்சலி அவர்களின் மாமியாருமாகிய ஸ்ரீமதி செல்லம்மா அவர்கள் அவர்களைப் பிடித்த நோய்காரணமாகத் தமது மகனுடைய திருக்கோணமலை இல்லத்தில் தமது 69-வது வயதில் தேகவியோகமடைந்தனர். காலஞ்சென்ற அம்மையார் யாழ்ப்பாணத்திலே சைவாசாரத்தையும் ஒழுக்கத்தையும் உயிரினும் மேலாக மதித்து வாழ்ந்த உயர்குடியிற் தோன்றியவர். அம்மையாருடைய கணவன் திரு. சி. சபாரத்தினம் அவர்கள் யாழ்ப்பாணம் சைவபரிபாலனசபைக்கு நீண்ட காலம் தொண்டாற்றி வந்தவர். சபையினது சமயத் தொண்டுகள் புண்ணியகாச்சிமடதரும நிர்வாகம் ஆகியவற்றுக்கு அவர் புரிந்த தொண்டுகள் மறக்கற்பாலனவல்ல. அம்மையாரும் தமது கணவனைப் போன்று கடவுள் வழிபாடு, விரதம் அநுட்டித்தல் சிவனடியார் பக்தி, ஈகை முதலிய சற்கருமங்களை வழுவின்றிப் போற்றி வந்தவர். அம்மையாருடைய ஆன்மா சாந்தியடைவதாக.

## கச்சியப்பசிவாசாரிய சுவாமிகள் திருநாள்

நாள்: ஜய ஹூ கூஅ உ (2-3-55) புதன்கிழமை

இடம்: சைவபரிபாலனசபை நாவலர் மண்டபம்.

**நிகழ்ச்சிகள்:**

இரவு 6-30 — 7. கடவுளாராதனை, கந்தபுராண திருமுறைப் பூசை.

7 — 7-30 தமிழ்மறையோதல் ஓதுவார் திரு. மு சுப்பையா தேசிகர் அவர்கள்.

7-30 — 9 பிரசங்கம்.

"கச்சியப்ப சிவாசாரிய சுவாமிகள் வரலாறு"

பிரம்மஸ்ரீ க. வை. ஆத்மநாத சர்மா அவர்கள்.

"கந்தபுராண நாயகம்"

பண்டிதர் ம. வே. திருஞானசம்பந்தப்பிள்ளை அவர்கள்.

தமிழன்பர்களும், சைவாபிமானிகளும்சமுகமளிப்பார்களாக

மு. மயில்வாகனம்

சமயப்பிரசாரசபைக் காரியஸ்தர்,
சைவபரிபாலன சபை,

யாழ்ப்பாணம், 22-2-55.
M. 232 25-2 (௲—200)

## இலங்கை அரசாங்கப் புகையிரதப் பகுதி

### புகையிரதக் கடவைத் திருத்தங்கள்

வடபகுதி புகையிரத (Northern Line) மார்க்கத்தில், யாழ்ப்பாணம் — பலை பி. டபிள்யூ. டி. வீதியைச் சந்திக்கும் யாழ்ப்பாணம் கொக்குவில் புகையிரத ஸ்தானங்களுக்கிடையில் 245 மைலிலுள்ள புகையிரதக் கடவை திருத்தஞ் செய்வதற்காக 1955 ம் ஆண்டு பங்குனி மாசம் 17 ந் திகதி மாலை 10 மணி தொடக்கம் மறுநாட்காலை 5 மணி வரைக்கும் மூடப்பட்டிருக்கும் இக்காலத்தில் வாகனங்கள் ஆஸ்பத்திரி வீதி (Hospital Street) ஸ்ரான்லி வீதி புகையிரதக் கடவை (Stanley Road Level Crossing) யாற் போகவேண்டும்.

G 51 25-2

### அன்னிய படைத் தளங்கள்

இலங்கையிலுள்ள அன்னிய படைத்தளங்கள் இலங்கையின் எண்ணத்துக்கு மாறாக உபயோகிக்கப்படமாட்டா என்று கூறினார் சேர் ஜோன் கொத்தலாவல.

### முதலமைச்சரது சீனப் பயணம்

பங்குனி பிற்பகுதியில் அல்லது சித்திரை முற்பகுதியில் சேர். ஜோன் கொத்தலாவல சீனாவுக்குச் சென்று சீன முதலமைச்சர் ஸ்ரீ சௌ என் லாயைச் சந்திப்பாராம்.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

ஊர்காவற்றுறை மேற்கு கதிர்காமர் கணபதிப்பிள்ளை மைம்பெண் செல்லமுத்து தானுகவும் காலஞ்சென்ற தனது புருஷன் கதிர்காமர் கணபதிப்பிள்ளையின் ஆதனத்துக்கு இக்கோட்டில் 1703 ம் உறுமைத் தத்தவ வழக்கில் தத்துவகாரியாகவும்

— வழக்காளி

இல. 11503

எதிராக

1 ஊர்காவற்றுறை நாகமுத்து இளையதம்பி
2 ஷை இளையதம்பி கோபாலபிள்ளை
3 ஷை இளையதம்பி தம்பையாவும் பெண்
4 ஷை அன்னப்பிள்ளையும்

எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் 11503 ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் தண்டுக் காணிகளை 1955 ஹு பங்குனி மீ 25 உ வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அக்கந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத் தொகை முதல்வட்டி ரூபா 2410-00 ம் இதில் ரூபா 2000 க்கு 6—8—54 தொடக்கம் 18—11—54 வரைக்கும் வருடமொன்றுக்கு 100 க்கு 12 வீத வட்டியும் அதன் பின் முழுத் தொகைக்கும் வருடமொன்றுக்கு 100 க்கு 5 வீத வட்டியும் கோட்டுச்செலவு ரூபா 230-20.

### காணி விபரம்

1 வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் தீவுப்பகுதி ஊர்காவற்றுறைக் கோயிற்பற்று சரம்பன் இறை பறக்கி தோட்டம் நிலப்பரப்பு ஒன்றரை (1½) யும் வீடும் எல்லை கிழக்கு வீராசாமி பெண் செல்வம் வடக்கு செக்காதரம் பெண் இராசமணி மேற்கு றோட்டு தெற்கு கை ஒழுங்கை இதடங்கலும்.

2 ஷை கோயிற்பற்று சரம்பன் இறை சந்தன் வெள்ளிடையும் சந்தன் வெள்ளிடை கொம்மஞ்ஞவிற கொள்விலையும் நிலப்பரப்பு இரண்டு (2)ம் பனைகளும் எல்லை கிழக்கு யக்கோப்பிள்ளை சவிரிமுத்து வடக்கு ஒழுங்கை மேற்கு ஆண்டி அரியபுத்திரன் தெற்கு இராமு முத்துச்சாமியும் நாரணசாமி பெண் மீனாட்சிப்பிள்ளையும் இதடங்கலும்.

3 ஷை கோவிற்பற்று சும்பன் இறை சந்தன வெள்ளிடையும்சந்தன வெள்ளிடைகொம்மஞ்ஞவிற கொள்விலையும் நிலப்பரப்பு ஒன்றரை (½) எல்லை கிழக்குசின்னத்தம்பி மசிலாமணிவடக்கு கணபதிப்பிள்ளை மைமபெண் பாக்கியமும்மறுபேரும் மேற்குமதெற்கும்ஒழுங்கை இதடங்கலும் ஆனால் இதற்குள் நிற்கும் தென்னம்பிள்ளைகள் கிழக்கெல்லைக்காரனுக் குரியதாக புறநீங்கல.

ஆ. ச. கந்தையா
A. S. Kandiah
கொம்மிஷனர்

காரைநகர்
10—2—52
M 230 25-2 (௲ 50)

## சைவப்பிரசங்கம்

நிகழும் மாசி மீ 8ம் உ (20-2-55) ஞாயிற்றுக்கிழமை இரவு யாழ்ப்பாணம் வண்ணை வாலாம்பிகாசமேத வைத்தீசுரேஸ்வர ஆலயத்தில் மகாசிவராத்திரிவிழா மிகச் சிறப்பாக நடைபெற்றது. அத்தருணம் திரு பொன். அப்புக்குட்டி அவர்கள் "சிவ வழிபாடும் சீவன் உய்யும் வழியும்"என்னும் பொருள் பற்றி ஓர் சிறந்த சைவப் பிரசங்கம் செய்தார்.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

1. வட்டுக்கோட்டை மேற்கு பெருமையினர் வாதராசாவும்
2. ஷை விசாலாட்சியும்

வழக்காளிகள்.

இல. 10986

எதிராக

வட்டுக்கோட்டை மேற்கு ஆறுமுகம் பொன்னம்பலநாதன்.

எதிராளி.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் 10986ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் தண்டுக் காணிகளை 195! ஹு பங்குனிமீ 23 ந் உ புதன்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அக்கந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்

தீர்வைத் தொகை :— முதல் வட்டி ரூபா 4942/= ம் இதில் ரூபா 3600. க்கு 30-3-54 தொடக்கம் 8-6-54 வரைக்கும் வருடமொன்றுக்கு 100 க்கு பத்துவீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் 8-6-54 தொடக்கம் இறுக்கும்வரைக்கும் ஐந்து வீதவட்டியும்கோட்டுச்செலவு ரூபா206 04

### காணி விபரம்

1. வடமாகாணம் யாழ்ப்பாண டிஸ்றிக் வலிகாமம் மேற்குப்பகுதி வட்டுக்கோட்டை கோயிற்பற்று வட்டுக்கோட்டை மேற்கிறை வினாலை நெற்பரப்பு ஒன்பது (9)ம் வீடும் கிணறும் செய்பயிர் வான்பயிர்களும் எல்லை கிழக்கு சிதம்பரப்பிள்ளை சபாநாயகம் வடக்கு கதிரவேலுப்பிள்ளை கந்தசாமி மேற்கு கதிரவேலுப்பிள்ளை கந்தசாமியும் ஆறுமுகம் அருணாசலமும் தெற்கு ஒழுங்கை. சொல்லப்பட்ட கிணற்றில கிழக்கெல்லைக்காறரின் அரைவாசிப்பாக உரித்தும் துர்வையும் வழிவாய்க்காலும் பிறநீங்கல்,

2 ஷை வடடுக்கோட்டை மேற்கிறை மாவிலிப்பிட்டி நெற்பரப்பு ஒன்பதுடன எட்டில் ஏழு (9 7/8) எல்லை கிழக்கு ஆறுமுகம் சேதுப்பிள்ளை வடக்கும் மேற்கும் சுப்பிரமணியம் முத்துக்குமாரு தெற்கு சிவசிதம்பரப்பிள்ளை திருஞானசம்பந்தப்பிள்ளையின் உருமைகாரரும் சுப்பிரமணியம் கணபதிப்பிள்ளையும் இதடங்கலும்.

ஆ. ச. கந்தையா
A S. Kandiah
கொமிஷனர்

காரைநகர்,
2-2-1955.
M. 231 25—2 (௲—50)

# உங்கள் நக்ஷத்திரம்? எங்கள் சோதிடம்

ஸ்ரீ ராதாகிருஷ்ணன் கணிப்பது.

இவ்வாரப் பலன்கள், 27—2—55 — 5—3—55

**மேடராசி அச்சுவினி, பரணி கார்த்திகை முதற்கால்.**

இந்தவாரம் உம்முடைய திட்டங்களின்படி முன்னேற முடியாது வருந்துவீர். நீர் கொஞ்சப் பிரயாணம் செய்யவேண்டி வரக்கூடும் அல்லது நடைமுறை ஒழுங்குகளில் சில மாற்றங்களுண்டாகலாம். வார இறுதியில் நண்பர்களுடன் சண்டைகளுக்கிடமுண்டு.

**இடபராசி கார்த்திகை 2, 3, 4-ம் கால்கள் ரோகிணி, மிருகசீரிடம், 1, 2-ம் பாதம்.**

இந்தவாரம் உம்முடைய சில இனத்தவர்களுடன் கோபிக்கவேண்டி வரக்கூடும். பணத்துறையில் நல்ல வாரம். உம்முடைய முயற்சிகள் எல்லாவற்றிலும் நீர் சித்தியெய்துவீர். தேகசுகம் விசேட கவனம் கொடுக்கப்பட வேண்டும்.

**மிதுனராசி மிருகசீரிடம், 3,4 திருவாதிரை, புனர்பூசம் 1,2,3.**

முதல் இரு நாட்களும் உம்மை மிக அதிகமாக கலைக்கக்கூடும். குடும்ப நிலைமைகள் கொஞ்சமும் நல்லாயிருக்கமாட்டா குடும்பச் சூழலில் சுகவீனத்திற்கிடமுண்டு. ஒன்றையும் புதிதாய்த் தொடங்கவேண்டாம்.

**கடகராசி புனர்பூசம் 4ம்பாதம் பூசம் ஆயிலியம்.**

இந்தவாரம் நண்பர் உமக்கு மிகுந்த செலவுண்டாக்குவர். உமக்கு வேண்டிய வசதிகளிருக்கமாட்டா செவ்வாயும் புதனும் எல்லாவற்றிலும் பழுதானவை. சண்டை தொடுக்க முந்தவேண்டாம்.

**சிங்கராசி மகம், பூரம், உத்திரம், 1ம் பாதம்.**

இந்தவாரம் குடும்பப் பகுதியில் எல்லாம் நல்லாயிருக்க மாட்டா ஆபத்தான தொந்தரவுகளை விலக்க வேண்டுமானால் உம்முடைய கோபத்தை அடக்குக. வியாழன் வெள்ளியும் சனி காலையும் எல்லாவற்றிலும் பிழையானவை.

**கன்னிராசி உத்திரம் 2,3,4ம் பாதம் அத்தம் சித்திரை 1, 2ம் பாதம்.**

இந்த வாரம் பண நெருக்கடிகள் உண்டாகும். உம்முடைய வியாபாரத்துக்கு அல்லது உத்தியோகத்துக்கு விசேட கவனம் செலுத்துக அல்லது சில நட்டமோ தொந்தரவோ உண்டாகக்கூடும். சுகவீனங்களுக்கு மிடமுண்டு. சனி பிற்பகல் கவனமாய்க் கழிக்கவேண்டும்.

**துலாம் சித்திரை 3,4ம் பாதம். சுவாதி விசாகம் 1,2,3ம் பாதம்**

இந்தவாரம் குடும்பத் தொந்தரவுகள் உம்மை அதிகம் கலைக்கக்கூடும். ஆனால் உத்தியோகத் துறையில் எல்லாம் நன்று நன்மையான பல மாற்றங்களுண்டாகும்.

**விருட்சிகராசி விசாகம் 4-ம் பாதம் அநுஷம், கேட்டை.**

உம்முடைய எல்லாச் சமூக வேலைகளிலும் கவனமாயிருக்கவும். அவமானங்கள் உண்டாகக்கூடும் மனச் சலனத்துக்கும் பணத் தொக்கரவுகளுக்கு மிடமுண்டு, ஆனால் பெரும ஆபத்தான இடையூறு ஒன்றும் உண்டாகமாட்டாது.

**தனுராசி மூலம் பூராடம் உத்தராடம் 1 பாதம்.**

இந்தவாரம் சாத்திரத இடங்களிலிருந்து தனலாபம் நிச்சயம் உம்முடைய சொந்தக்காரியங்களில் அதிகம் நிறைவேற்றப்படும், ஆனால் சுகவீனங்களுக்கிடமுண்டு.

**மகரராசி உத்தராடம் 2,3,4ம் பாதம் திருவோணம் அவிட்டம் 1, 2ம் பாதம்.**

இந்தவாரம் உம்முடைய எல்லாக் காரியங்களிலும் நீர் மிகக் கவனமாயிருக்க வேண்டும். ஆனால் உரத்த நின்று காரியஞ் செய்ய வேண்டிய இடத்தில் உம்முடைய கைகள் கட்டப்பட்டிருப்பதைக் காண்பீர். மனவேக அபிமானம் உமது சொந்த முன்னேற்றத்தோடு முரண்படக்கூடும்.

**கும்பராசி அவிட்டம் 3, 4ம் பாதம், சதயம், பூரட்டாதி 1, 2, 3 ம் பாதம்.**

இந்தவாரம் உம்முடைய பகைவரை நீர் வெல்லக்கூடியதாயிருக்கும் பணத் துறையில் இது நகுந்த பலன் தரும் மாதமாயிருக்கும். உம்முடைய வியாபாரத்தில போட்டியும் அழிந்து விடும்.

**மீனராசி பூரட்டாதி 4, உத்தரட்டாதி ரேவதி.**

இந்தவாரம் வலிமை மிகுந்தவர்களுடன் முரண்பட்டுக் கொள்ள வேண்டாம். நீர் சித்திபெய்தவேண்டுமானால் கோபத்தை அடக்கி விட்டுக்கொடுக்கும் முறையைக் கையாளவேண்டும், செலவதிகரிக்கும்.

---

வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்

Printed and Puplished by S. P. Kandiah, F. I. S. A. Lond residing at 245; Navalar Road Jaffna. for and on behalf of the Proprietors the Saiva Paripalana Sabai. Jaffna, at their Press, the Saiva Prakasa Press, Vannarpannai. Jaffna on Friday February 25. 1955.